வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். STC 1256/2023

வழக்கு சாட்சி PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்குமார் | ஜாதி | |
| கணவர்/தந்தை | ஆனந்த கிருஷ்ணன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 42 |

தேதி 28.01.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

நான் தற்போது எங்கு என்ன வேலை செய்கிறேன் என்றால் DBM Solution நிறுவனத்தின் மேனஜராக வேலை செய்கிறேன். நான் மேனஜர் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் அந்த நிறுவனம் கம்பெனி அல்ல. கடை தான். மேற்படி நிறுவனத்தில் வேலை செய்வதற்கு என்னிடம் வைப்பீடுத் தொகை பெறுகிறார்களா என்றால் இல்லை. மேற்படி DBM Solution நிறுவனம் தனியார் நிறுவனமா, பொது நிறுவனமா என்றால் அது கடை. இந்த நிறுவனத்தின் உரிமையாளர் யார் என்றால் A. சாந்தி. மேற்படி நிறுவனம் புரோப்போரேட்டர் ஷிப் நிறுவனமா என்றால் ஆமாம். நிறுவனத்தின் புரோப்போரேட்டர் ஷிப் இவ்வழக்கினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

அசல் மனுவில் உரிமையாளர் சாந்தி தாக்கல் செய்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ம.த.சா.ஆ. 4 எங்களுடைய ஆவணம் என்றால் ஆமாம். ம.த.சா.ஆ. 4 ல் மனு நிறுவனத்தின் உரிமையாளர் சாந்தி என குறிப்படப்படவில்லை என்றால் எனக்கு ஆங்கிலம் தெரியாது. ம.த.ச.ஆ. 4 ல் சாந்தி கையொப்பம் மற்றும் என்னுடைய கையொப்பம் இல்லை என்றால் ஆமாம். இவ்வழக்கினை நடத்துவதற்கு சாந்தியிடம் நான் அதிகார பத்திரம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. லெட்டர் பேடில் பெற்றுள்ளேன்.

நான் DBM Solution நிறுவனத்தில் வேலையில் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு நிலுவையில் உள்ளது DBM Solution நிறுவனம் உரிமையாளரான சாந்திக்கு தெரியாது என்றால் சரியல்ல. மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ்

வழக்கானது அதிகார பத்திரத்தின் மூலம் தாக்கல்செய்ய வேண்டுமே அன்றி கடிதத்தின் மூலம் அல்ல என்றால் சரியல்ல. DBM Solution நிறுவனத்தின் அன்றாட நடைமுறைகள் சாந்திக்கு தெரியுமா என்றால் தெரியும். தினசரி நடைமுறை கணக்குகள் சாந்திக்கு தெரியுமா என்றால் தெரியும். ம.த.சா.ஆ. 6 என்னுடைய ஆவணம் என்றால் ஆமாம். ம.த.சா.ஆ. 6 ல் சாந்தி கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை அது கணினி வழி பதிவு ஆகும். ம.த.சா.ஆ. 6ல் யாருடைய கையொப்பமும் முத்திரையும் இல்லை என்றால் ஆமாம். ம.த.சா.ஆ.6 இன்வாய்ஸ் அசலானது யாரிடம் உள்ளது என்றால் எதிரியிடம் தான் உள்ளது.

என்னிடம் அதனுடைய நகல் தான் உள்ளது. மேற்படி இன்வாய்சினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். மேற்படி இன்வாய்சினை ஆவணமாக தாக்கல் செய்துள்ளோமா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். ஆவணமான தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் கட்டுமானத் தொழிலில் தரைத்தளத்தில் உபயோகப்படுத்தப்படும் கெமிக்கல்களை வியாபாரம் செய்து வருகிறேன். மேற்படி கெமிக்கல்கள் எந்த நிறுவனத்தில் இருந்து பெறுகிறோம் என்றால் MYK நிறுவனத்திடம் இருந்து பெற்று வருகிறோம்.

எத்தனை ஆண்டுகளாக எதிரியுடன் வணிகத் தொடர்பில் இருந்தோம் என்றால் 1ஆண்டாக. எத்தனைமுறை எதிரி நிறுவனத்திடம் பொருட்களை சப்ளை செய்தேன் என்றால் 4, 5 முறை இருக்கும். எதன் அடிப்படையில் பொருள் வழங்குவோம் என்றால் கடன் அடிப்படையில். தொடர் கணக்கில் தான் வரவு செலவு இருக்கும் என்றால் ஆமாம். என்னிடம் வரவு, செலவு கணக்கு பதிவேடு உள்ளது என்றால் உள்ளது. நீதிமன்றத்தில் அதனை தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ள இன்வாய்சுக்கு முன்னர் எதிரி கம்பெனிக்கு இன்வாய்சு உள்ளதா என்றால் உள்ளது. அதற்கு முன்னர் இன்வாசினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சியானது வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**